Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 143/2022 PW-2**

Name : கிருஷ்ணமூர்த்தி
Father / Husband name : நந்தகோபால்
Village : பாண்டிச்சேரி
Age : 68
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 24.10.2025

A1 to A3 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. அசா.1 எனது நண்பர். சாட்சிகள் நாகலட்சுமி, ஞானராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 05.12.2021 ம் தேதி காலை சுமார் 7 மணியளவில் அரிகிருஷ்ணனின் தங்கை நாகலட்சுமியும், அவரின் மகள் சரண்யாவும் அவரின் திருமணம் சம்மந்தமாக பேராவூர் கிராமத்திற்கு மாப்பிள்ளையை பேசி முடிவு செய்ய சென்றபோது அங்கிருந்த நாகலட்சுமியின் கணவர் மற்றும் அவரின் குடும்பத்தினர் பிரச்சனை செய்து நாகலட்சுமியை அடித்ததால் அவர் அ.சா.1க்கு போன் மூலம் தகவல் சொல்லி அ.சா.1 சம்பவயிடத்திற்கு சென்று நாகலட்சுமியை அழைத்துக்கொண்டு கிளியனூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது

திண்டிவனம் மேம்பாலம் இறக்கத்தின் கீழ் நாகலட்சுமியின் மைத்துனரின் 3 எதிரிகள் வாகனத்தை மறித்து கத்தி, தடி ஆகியவற்றைக்கொண்டு, அ.சா.1 ன் சட்டையை பிடித்து தடியால் இடது கன்னத்தில் அடித்து காயப்படுத்தியதால் அ.சா.1 திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்று கேட்டு நீங்கள் அ.சா.1 ஐ பார்க்க திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**